<u>**O.S.No. 19/2018**</u>

<u>**DW 1 :**</u>தனலட்சுமி                                        தேதி 06.02.2026

<u>பிவாசா 1  சாட்சி சத்தியப்பிரமாணம்  செய்யப்பட்டு, வாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>

என் அண்ணன் தாக்கல் செய்த வழக்கில் 1ம் அயிட்ட சொத்து என் தாத்தா காலத்தில் வாங்கப்பட்டது என்றால் சரிதான். 2ம் அயிட்ட சொத்து 1964 ல் என் அப்பா மற்றொரு கூட்டு பங்குதாரருடன் பாகப்பிரிவினை செய்து கொண்டார் என்றால் சரிதான். 2ம் அயிட்டத்தை பொறுத்து என் அப்பா மற்றும் கூட்டு பங்குதாரருடன் வாய்க்கால் வழி சம்மந்தமாக ஒரு பத்திரம் எழுதி கொண்டார் என்றால் சரியல்ல. அது வாசாஆ 27 ஆக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் அது எனக்கு தெரியாது. 3ம் அயிட்ட சொத்து ஆதியில் என் தாத்தாவிற்கு பாத்தியம் என்றால் அது எனக்கு தெரியாது. பின்னிட்டு பாதி சொத்து விற்கப்பட்டு மீண்டும் கிரையம் வாங்கப்பட்டது என்றால் சரிதான். 21.1.1987 ல் வாசாஆ 7 ன் படி கிரையம் வாங்கினார் என்றால் சரிதான். அது சுமார் 6 ஏக்கர் இருக்கும்.  மேற்படி கிரையம் வாங்க (வாசாஆ 7) என் அண்ணன் தான் தொகை கொடுத்தார் என்றால் சரியல்ல. என் அப்பா தான் கொடுத்தார். எவ்வளவு தொகை கொடுத்தார் என்றால் ரூ.30 ஆயிரம் கொடுத்து கிரையம் வாங்கினார். அந்த காலகட்டத்தில் என் தந்தையிடம் தொகை இல்லை என்றும் என் அண்ணன் தான் கொடுத்தார் என்றால் சரியல்ல. வாசாஆ 7 அசல் பத்திரத்தை என் அண்ணன் தாக்கல் செய்திருக்கிறார் என்றால் சரியல்ல. என் அப்பாவிடம் தான் மூல பத்திரம் இருந்தது என் அண்ணன் எடுத்து சென்று விட்டார். தாவா 1 முதல் 3 அயிட்ட சொத்துகள் அனைத்தும் மானாவாரி பூமி என்றால் சரியல்ல கிணற்று பாசனம் உள்ள பூமி. தாவா 2ம் அயிட்டத்தில் மட்டும் சொற்ப வருமானம் வந்தது என்றால் சரியல்ல. எங்கள் குடும்பத்தில் என் பெற்றோர் நான் என் அண்ணன் மற்றும் 2 அக்காக்கள் ஆகியோர் இருந்தோம். மானாவாரி பூமியில் வந்த வருமானம் எங்கள் குடும்பத்திற்கு செலவிற்கு போதுமானதாக இருந்தது

என்றால் சரியல்ல. என் அண்ணனுக்கு வேறு தொழில் தேவைப்பட்டது என்றால் சரியல்ல. அந்த சமயத்தில் நானும் என் அக்காக்களும் திருமணத்திற்கு தயாராக இருந்தோம் என்றும் என் அப்பாவிடம் போதிய பணம் இல்லை என்றால் சரியல்ல. என் அண்ணன் இளம் வயதில் மாட்டை வாங்கி சந்தைக்கு விற்றும் 1 ம் அயிட்ட சொத்தில் கோழிப்பண்ணை அமைத்தும் வருமானம் ஈட்டினார் என்றால் சரியல்ல என் அப்பா தான் செய்து வந்தார். சேவல் கோழி ஆகியவற்றை வளர்த்து விற்று தனிப்பட்ட வருமானத்தை என் அப்பா ஈட்டி வந்தார் என்றால் சரியல்ல. என் அண்ணனை ஆட்டு வியாயாரி கோழி வியாபாரி என்று சொல்வார்கள் என்றால் சரியல்ல என் அப்பாவை தான் அவ்வாறு சொல்வார்கள். வாதி வளர்த்த கோழி சேவல் ஆகியவற்றை வெளி மாநிலத்தில் இருந்து வந்து வாங்கி செல்வார்கள் என்றால் அவருடைய திருமணத்திற்கு 1 வருடத்திற்கு முன்பு வரை செய்தார் அதில் நஷ்டமாகி விட்டது. மேற்படி விவரத்தை பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. கோழி பண்ணை ஆடு மாடு விற்றதில் வந்த வருமானத்தை கொண்டு தான் என் அண்ணன் அயிட்டம் 3 ல் உள்ள பாதி சொத்தை என் தந்தை பெயரில் கிரையம் வாங்கினார் என்றால் சரியல்ல. என் அண்ணன் சம்பாதித்த பின்னிட்டு தான் எனக்கும் என் சகோதரிகளுக்கும் ஒவ்வொன்றாக திருமணம் நடந்தது என்றால் சரியல்ல. என்னுடைய திருமணத்திற்கும் என் அக்காக்களின் திருணமத்திற்கும் தலா 20 பவுன் போட்டு என் அண்ணன் திருமணம் செய்து கொடுத்தார் என்றால் சரியல்ல. என் அப்பா தான் திருமணம் செய்து கொடுத்தார். 1999 ல் என் அப்பாவின் வயது 80 என்றால் சரிதான். என் அப்பா எங்கும் வெளியில் செல்லமுடியாத நிலையிலும் விவசாயம் செய்ய முடியாத நிலையில் இருந்தார் என்றால் சரியல்ல. என் அப்பா விவசாயம் செய்ய முடியாத நிலையில் தாவா 1 ம் அயிட்ட சொத்தில் உள்ள வீட்டிற்கு என் அண்ணன் குடிபோகிவிட்டார் என்றால் கோழிப்பண்ணை வைத்திருந்ததால் வீட்டிற்கு குடிபோகிவிட்டார். என் பெற்றோர்கள் பூர்வீக கோபிக்கவுண்டன் பாளையத்தில் குடியிருந்தார்கள் என்றால் சரிதான். என் பாட்டி வள்ளியம்மாளுக்கு கோபிக்கவுண்டன் பாளையத்தில் 2.27 ஏக்கர் இருந்தது என்றால் சரிதான். என் அண்ணனுக்கு 33

வயதில் திருமணம் ஆனது என்றால் சரிதான். எங்களுக்கு திருமணம் ஆன பின்னிட்டு அவருக்கு ஆனது. என் அப்பாவிற்கு வயதாகிவிட்டதால் அவருடைய சொத்துகளை பொறுத்து பாதுகாப்பு செய்யும் எண்ணத்தில் பஞ்சாயத்து கூட்டினார் என்றால் சரியல்ல. மேற்படி பஞ்சாயத்து வைகாசி 2000 ல் நடந்தது என்றால் சரியல்ல. மேற்படி பஞ்சாயத்தில் சதாசிவம் அர்ஜூனன் பழனிசாமி ஈஸ்வரன் மற்றும் பலர் கலந்து கொண்டார்கள் என்றால் சரியல்ல. ஈஸ்வரன் என்னுடைய சின்னம்மா மகன். எங்களுக்கிடையே போக்குவரத்து இல்லை. பஞ்சாயத்து பேசியதில் தான் எங்களுக்கிடையே விரோதம் ஏற்பட்டது என்றால் சரியல்ல. விரோதம் இல்லை. பஞ்சாயத்தில் நானும் என் அக்காகளுக்கும் என் பெற்றோர்களும் என் அண்ணனும் கலந்து கொண்டார்கள் என்றால் சரியல்ல. பஞ்சாயத்தில் குடும்ப சொத்து முழுவதையும் என் அண்ணன் எடுத்து கொள்ள வேண்டியது என்றும் என் பெற்றோருக்கு ரூ.10 லட்சம் கொடுத்து விட வேண்டியது என்று முடிவு செய்யப்பட்டது என்றால் சரியல்ல. நெருங்கிய உறவு முறை என்பதால் மேற்படி பஞ்சாயத்து எழுத்து மூலமாக எழுதப்படவில்லை என்றால் சரியல்ல. பஞ்சாயத்தில் ஒரு பகுதியாக 19.6.2000 ல் வாசாஆ 9 ரூ.3 லட்சத்திற்கு கிரையம் ஆனது என்றால் ரூ.112500/- க்கு கிரையம் ஆனது. கிரைய தொகை ரூ.3 லட்சம் என்றால் சரியல்ல. கிரைய பத்திரத்தில் குறைவாக எழுதப்பட்டு கிரையம் ரூ.3 லட்சத்திற்கு ஆனது என்றால் சரியல்ல. பஞ்சாயத்தில் பேசியவாறு என் அண்ணன் தொகையை 3 தவணையாக கொடுப்பதாக ஒப்புக்கொண்டார் என்றால் சரியல்ல. ரூ.3 லட்சத்திற்கு கிரையம் ஆகி 3 நாட்கள் கழித்து பஞ்சாயத்து தொகையை 22.6.2000 ல் என் அப்பாவிடம் என் அண்ணன் கொடுத்து விட்டார் என்றால் சரியல்ல. அந்த தொகையில் என் தந்தை எனக்கும் என் அக்காக்களுக்கும் தலா ரூ.50 ஆயிரம் கொடுத்தார் என்றால் சரியல்ல. 22.6.2000 ல் சொத்தின் முழு உரிமையாளர் என் அண்ணன் வாதி என்றால் சரியல்ல. 1 ம் அயிட்ட சொத்தில் ஒரு ஆழ் துளை கிணறு என் அண்ணன் அமைத்தார் என்றால் சரியல்ல. என் அப்பா தான் போட்டார். மீண்டும் 3 அயிட்டத்தில் 2 போர் என் அண்ணன் அமைத்தார் என்றால்

சரியல்ல என் அப்பா தான் அமைத்தார். மோட்டாருக்கான பம்பு செட் வாங்கியது என் அண்ணன் தான் என்றும் அதற்கான ஆவணங்கள் வாசாஆ 19 முதல் 26 வரை தாக்கல் செய்திருக்கிறார் என்றால் சரியல்ல. தாவா 1ம் அயிட்டத்தில் என் அண்ணன் கோழிப்பண்ணையை எடுத்துவிட்டு தார்சு வீடு கட்டினார் என்றால் சரியல்ல என் அப்பா தான் கட்டினார். மேற்படி வீட்டை 2009 ல் ரூ.10 லட்சம் செலவு செய்து என் அண்ணன் கட்டினார் என்றால் சரியல்ல என் அப்பா தான் கட்டினார். வாசாஆ 16 முதல் 18 வரையான வீட்டு வரி ரசீதுகள் என் அண்ணன் கட்டினார் என்றால் சரியல்ல என் தந்தை பணம் கொடுத்து கட்டினார். என் தந்தை பணம் கொடுத்து கட்டினார் என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. தோட்டத்தில் உள்ள வீட்டின் கதவு எண் எனக்கு ஞாபகத்தில் இல்லை. வாதி ஒரு போர் போட ரூ.44 ஆயிரம் செலவு செய்திருக்கிறார் என்றால் சரியல்ல. என் பெற்றோர் இறக்கும் வரை கோபிக்கவுண்டன்பாளைத்தில் உள்ள வீட்டில் குடியிருந்தார்கள் என்றால் சரிதான். நானும் என் அக்காகளுக்கும் அவரவருடைய கணவர் வீட்டில் வாழ்ந்து வந்தோம் என்றால் என் கணவர் வீட்டில் தான் வசித்து வருகிறோம் அவ்வப்போது தாவா சொத்திற்கு சென்று வருவோம் ஒரு அக்கா தாவா சொத்தில் இருக்கிறார். என் அண்ணன் தான் பூமியை அனுபவத்தில் இருந்து வருகிறார் என்றால் சரியல்ல. என் தந்தை உயிருடன் இருக்கும் போது ரூ.10 லட்சம் வட்டிக்கு விட்டு ரூ.20 லட்சம் கையிருப்பாக வைத்திருந்தார் என்றால் சரியல்ல. மன வருத்தம் இருந்ததால் நான் மேற்படி தொகையை என் அப்பாவிடம் இருந்து பெற்று கொண்டேன் என்றால் சரியல்ல. மேற்படி ரூ.20 லட்சத்தை நானும் என் அக்காகளுக்கும் எடுத்து கொண்டோம் என்றால் சரியல்ல. அ வ எண் 222/2010 பெருந்துறை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யும் போது என் அப்பாவின் வயது என்ன என்றால் எனக்கு ஞாபகத்தில் இல்லை. என் அப்பா சுயநினைவு இல்லாமல் இருந்தார் என்றும் எங்கும் வெளியில் செல்ல இயலாத நிலையில் இருந்தார் என்றும் அதை பயன்படுத்தி பிவாசாஆ 1 பாகப்பிரிவினை பத்திரத்தையும் அ வ எண் 222/10 என் தந்தை தாக்கல் செய்ததாக கூறி ஒரு எதிர் வழக்குரையும் தயார் செய்து கொண்டோம் என்றால்

சரியல்ல. பிவாசாஆ 1 ஏற்பட்ட பிறகு அ வ எண் 222/10 தள்ளுபடிக்கு விட்டு விட்டோம் என்றால் சரியல்ல. இந்த வழக்கை வாதி தாக்கல் செய்த பின்னிட்டு தான் அ வ எண் 222/10 கோப்பிற்கு எடுக்க மனு செய்திருக்கிறோம் என்றால் சரியல்ல. பிவாசாஆ 19 மற்றும் பிவாசாஆ 20 காவல் நிலையத்தில் புகார் கொடுத்ததாக சொல்லப்படும் ஆவணங்கள் என் தந்தையால் கொடுக்கப்படவில்லை என்றும் நாங்களாக தயார் செய்த ஆவணங்கள் என்றால் சரியல்ல. நாங்கள் சொல்லும் தேதிகளில் திருமணம் நடக்கவில்லை என்றும் அதற்கு முன்னதாகவே நடந்துவிட்டது என்றால சரியல்ல. என் தந்தை கோபிக்கவுண்டன் பாளையத்தில் உள்ள பூர்வீக இடத்தில் இறந்தார் என்றும் என் அண்ணனை அந்த வீட்டில் அனுமதிக்கவில்லை என்றால் சரியல்ல என் அண்ணன் வரவே இல்லை. அவர் வந்தார் என்றும் நாங்கள் அவரை தடுத்துவிட்டோம் என்றால் சரியல்ல. என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் கோழிப்பண்ணையை என் தந்தை அமைத்து நடத்தியதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் என்னுடைய பிராது மற்றும் எதிர்வழக்குரையில் சொல்லாத சங்கதிகளை பிரமாண வாக்குமூலத்தில் புதிய சங்கதிகளாக சொல்லியிருக்கிறேன் என்றால் சரியல்ல. பஞ்சாயத்து நடந்தது உண்மை என்றும் என் அண்ணன் தாக்கல் செய்த வழக்கு தீர்ப்பாக வேண்டும் என்றும் நான் நடத்தும் வழக்கு தள்ளுபடியாக வேண்டும் என்றால் சரியல்ல.